தமிழச்சி தங்கபாண்டியன்
தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்

# தொலைத் தொடர்பு நிர்வாக சட்ட கட்டமைப்பின் அவசியம் ஒன்றிய அரசுக்கு திமுக உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் கோரிக்கை

புதுடெல்லி, மார்ச் 30

தொலைத் தொடர்பு நிர்வாக சட்ட கட்டமைப்பின் அவசியம் தொடர்பான ஆலோசனை குறித்து வந்துள்ள விவரங்களை ஒன்றிய அரசு தெரிவிக்க வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் மக்களவையில் கோரிக்கை விடுத்தார்.

**இதுதொடர்பாக கடந்த 29 ஆம் தேதி அவர் விடுத்த கோரிக்கை விவரம் வருமாறு.**

ஒன்றிய அரசு வெளியிட்டுள்ள தொலைத் தொடர்பு நிர்வாக சட்ட கட்டமைப்பு அவசியம் தொடர்பான கருத்தறியும் அறிக்கை மீது தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணையகம் தெரிவித்துள்ள விவரங்களைத் தெரிவிக்க வேண்டும்.

2022 ஆம் ஆண்டின் இந்திய தொலைத்தொடர்பு வரைவு மசோதா தொடர்பாக கருத்தறியும் கூட்டம் ஏதும் நடத்தப்பட்டதா? நடத்தப்பட்டிருந்தால் அதைப்பற்றிய விவரங்களைத் தெரிவிக்க வேண்டும். இது தொடர்பாக பிரதான விஷயங்கள் மற்றும் இதர விஷயங்கள் குறித்து கருத்து தெரிவித்தவர்களின் எண்ணிக்கை விவரங்களைத் தெரிவிக்க வேண்டும். தொலைத்தொடர்பு வரைவு மசோதா தொடர்பாக மாநிலங்களின் கருத்தறியப்பட்டதா? அவ்வாறு கருத்தறியப்பட்டிருந்தால் அதைப்பற்றிய விவரங்களைத் தெரிவிக்க வேண்டும் என்று உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் கோரினார்.

**திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய அரசின் தகவல் தொடர்புத்துறை இணை அமைச்சர் தேவு சிங் சௌகான் அளித்த பதில் விவரம் வருமாறு:**

இந்திய தொலைத்தொடர்பு நிர்வாக சட்ட கட்டமைப்பின் அவசியம் என்ற தலைப்பிலான ஆலோசனை அறிக்கையை கடந்த 23-7-2022 அன்று சம்பந்தப்பட்டவர்களின் கருத்தறிய ஒன்றிய தகவல் தொடர்புத்துறை அமைச்சகம் வெளியிட்டது. இதன் அடிப்படையில் தொழில்துறை தொடர்புடையவர்கள் மற்றும் இதர சம்பந்தப்பட்ட பல்வேறு தரப்பினரிடம் இருந்து மொத்தம் 82 கருத்தறியும் பதில்கள் ஒன்றிய தகவல் தொடர்புத் துறை அமைச்சகத்திற்கு வந்தது.

**அவற்றில் இடம் பெற்றுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:**

தொலைத் தொடர்பு புதிய சட்ட கட்டமைப்பு விதிகள் தொடர்பான ஆலோசனை அறிக்கைக்கு அங்கீகாரமும் ஒப்புதலும் கிடைத்துள்ளது.

தொலைத் தொடர்பு சட்ட கட்டமைப்பு விதிகள் வரையறை செய்யப்பட வேண்டும். அது தொடர்பான விதிகள் புதுப்பிக்கப்பட வேண்டும்.

புதிய தொலைத்தொடர்பு தொழில்நுட்பங்களுக்கு ஏற்றவாறு கடுமையான சட்ட விதிகள் வகுக்கப்பட வேண்டும்

ஸ்பெக்ட்ரம் மேலாண்மைக்கு சட்டரீதியான விதிகள் வகுக்கப்பட வேண்டும். அவற்றின் பயன்பாடு ஒதுக்கீடு ஆகியவை பொதுநலனுக்கு உகந்தவாறு அமைய வேண்டும்.

தொலைத் தொடர்பு தரம் சர்வதேச தரத்திற்கு ஈடாக அமைய வேண்டும்

சைபர் செக்யூரிட்டி, தேசியப் பாதுகாப்பு, பொது நலன் பாதுகாப்பு ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளித்தல் வேண்டும்.

தொலைத் தொடர்பு சேவையில் தனித்துவமான திவால் நிலைக்கு விதிகள் வகுக்கப்பட வேண்டும். நிலுவை பாக்கித் தொகை அனைத்தையும் இதில் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்

அபராத விதிமுறைகளில் மாற்றம் செய்யப்பட வேண்டும். குற்றத்தின் தன்மைக்கு ஏற்றவாறு இவை அமைய வேண்டும்.

நடைமுறைகள் லைசென்ஸ் சீர்திருத்தங்கள் அதிர்வெண் ஒதுக்கீடு தொடர்பான யோசனைகளும் வரப்பெற்றுள்ளன.

கடந்த 31- 8-2022 அன்று தொலைத்தொடர்பு ஆணையத்திடம் இருந்து (டிஆர்ஏஐ) இந்த ஆலோசனை அறிக்கை தொடர்பாக கருத்துருக்கள் வரப்பெற்றுள்ளன. தொலைத்தொடர்பு சட்ட கட்டமைப்பு விதிகள் தொடர்பாக தொலைத் தொடர்பு ஆணையம் தெரிவித்துள்ள கருத்துகள் அவசியமானவை. இந்திய தந்தி சட்டம், இந்திய கம்பியில்லா தந்தி சட்டம், தந்தி கம்பி சட்டம் இவற்றைவிட இந்த கருத்துக்கள் விரிவான பயன் உடையவை ஆகும்.

தொலைத் தொடர்பு வரைவு மசோதா தொடர்பாக பல்வேறு தரப்பினிடமிருந்தும் கருத்தறிவதற்காக பல கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

தொலைத்தொடர்பு வரைவு மசோதா தொடர்பாக நடத்தப்பட்ட ஆலோசனைக் கூட்டங்களின் அடிப்படையில் ஆந்திரம், இமாச்சலம், பஞ்சாப், திரிபுரா, கர்நாடகம், மிசோரம் ஆகிய மாநில அரசுகளிடம் இருந்து ஒன்றிய அரசுக்கு கருத்துருக்கள் வந்துள்ளன. தொலைத்தொடர்பு சேவைகளில் ஓ.டி.டி ஒழுங்குபடுத்துதல், கேஒய்சி விதிமுறைகள் கம்பி இல்லா தகவல் தொடர்பு சாதனங்களுக்கு அனுமதி அளித்தல், தொலைத்தொடர்பு சேவையில் தவறுதல் மற்றும் திவால் உள்ளிட்ட பொது யோசனைகளும் அவற்றில் அடங்கும்.

******